செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி௵ (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௮] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது௵ கார்த்திகைமீ ௧௭ உ வெள்ளிக்கிழமை (3-12-1971) [இல-௩௪

## விவேகானந்த சபையும் அதன் சைவப்பணிகளும்

— சிவஸ்ரீ சு. பஞ்சாட்சர ஐயர் —

அமெரிக்க நாட்டில், சிக்காகோ மாநகரில் நடைபெற்ற சர்வசமய மகாநாட்டில் சைவமத தத்துவங்கள் பற்றி எடுதுரைத்துச் சைவத்தின் பழைமை, பெருமைகளை மேலைநாட்டவரும் அறியச் செய்த பெருமைக்குரியவர் வேதாந்த கேசரி விவேகானந்த அடிகளாராவர். அன்னார் பெயரால் இற்றைக்கு எழுபது ஆண்டுகளுககு முன் கொழும்பு மாநகரின்கண் நிறுவப்பட்டதுவே விவேகானந்த சபையாகும்.

அஃது, அற்றை நாள் தொட்டு இற்றை வரை ஆற்றிவரும் சைவப்பணிகள் பலவாகும். அதன் பணிகள் ஆண்டுதோறும் பெருகி வருகின்றன என்றே கூறலாம். அது சைவசமயப் பெரியார்களின் விழாக்கள் கொண்டாடுதல், சைவசமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல் சைவசமயப் பரீட்சை நடத்துதல் முதலாய பணிகளைச் செய்கின்றது. இவற்றைச் சிறிது நோக்குவாம்.

அச்சபை சைவ சமயப் பெரியார்களின் விழாக்களைக் கொண்டாடும் போது எம் நாட்டிலுள்ள சைவ அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்றது. இந்தியாவிலிருந்து ஈழத்துக்கு வரும் சைவ அறிஞர் அங்கு பெரும்பாலும் சிறந்த சைவசமயப் பொருள்கள் பொதிந்த சொன்மாரிகளைச் சொரிந்துவிட்டே தாயகம் திரும்புகின்றனர். அச்சபை 'விவேகானந்தன்'' என்ற சஞ்சிகையையும் நடாத்திச் சமயப் பணி புரிகின்றது.

விவேகானந்த சபையார் மாணவரிடையே சைவசமய அறிவு, சைவசமயவுணர்ச்சி, கடவுள் பக்தி முதலானவற்றை பதியச்செய்யும்முகக்மாக கடந்த 42 ஆண்டுகளாகச் சைவசமயப் பரீட்சை ஒன்றினை நடாத்தி வருகின்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

உ
திருச்சிற்றம்பலம்

வெள்ளையெருத் தின்மிசையார்
விரிதோடொருகா திலங்கத்
துள்ளுமிளமான்மறியார்
சுடர்பொற்சடைக டுலங்கக்
கள்ள நகுவெண் டலையார்
கடவூர்மயானமமர்ந்தார்
பிள்ளைமதியமுடையா
ரவரெம் பெருமானடிகளே.

திருச்சிற்றம்பலம்

— திருஞானசம்பந்தசுவாமிகள்

## திருப்பணி வேலைகள் ஆரம்பம்

திருக்கேதீச்சர மூலஸ்தானக் கருங்கல் திருப்பணி வேலை இம் மாதம் 13ம் திகதி ஆரம்பமாகின்றது. அர்த்த மண்டபம், மகா மண்டபம், சண்டேசுவரர் கோவில் ஆதியன கருங்கல்லால் அமைக்கப்படவிருக்கின்றன.

பழனியைச் சேர்ந்த திரு. எம். செல்லக்கணபதி தொடங்கி வைப்பார்.

## சிதம்பரத்தில் நாவலர் பெருமான் குருபூசை விழா

யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலையையும் சென்னை நகரில் வித்தியாநுபாலன அச்சுயந்திரசாலையையும் நிறுவிய யாழ். நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் குருபூசை கார்த்திகைத் திங்கள் 22-ஆம் நாள் (8-12-71) புதன்கிழமை காலை 6 மணி முதல் 12 மணி வரை சிதம்பரம் சேக்கிழார் கோயிலிலும், நாவலர் உயர்நிலைப் பள்ளியிலும் நடராசர் கோயிலிலும் சிறப்பாக கொண்டாடப்பெறும். அன்று மாலை 4 மணி முதல் பாராட்டுக் கூட்டம் பேராசிரியர் திரு. அ. கி. பரந்தாமனார் எம். ஏ அவர்களதுதலைமையில்நடைபெறும்.

நாவலர்பெருமான் திருவுருவ ஊர்வலம் காலை 7-15 தொடங்கி 9 மணிவரை நிகழும். குருபூசை அதையடுத்து நிகழும். பாராட்டுக்கூட்டத்தில் மாணவ மாணவிகளின் பேச்சுக்கள், பாடல்கள் ஆதிய நிகழ்ச்சிகளும் வரவேற்புரை, சிறப்புச் சொற்பொழிவு இவைகளையடுத்து பரிசு வழங்கல், நாடகம் என்பனவும் இடம்பெறுமென சிதம்பரம் தி. க இராசேசுவரன் தெரிவிக்கின்றனர்.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை 8-12-71 புதன்கிழமை சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

### நிகழ்ச்சிகள்

மு. ப. 9 — பி. ப. 12 மணிவரை — சிவபூஜா மண்டபம் - சிவபூசை
நாவலர் மண்டபம் - நடராஜர் பூசை நால்வர் பூசை சற்குரு மணிமாலை ஓதுதல் மாகேசுரபூசை

மாலை 5-30 மணி

### பொதுக் கூட்டம்

தலைவர் திரு த. சோமசுந்தரம் அவர்கள்
தேவாரம்
தலைவர் முன்னுரை
தமிழ்மறையோதல் — யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்
நாவலரைப் பற்றிய பேச்சுக்கள்:
யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள்

1. நாவலர் தவம் — திரு மு. சதாசிவம் அவர்கள்
2. நாவலர் பணிகள் — வித்துவான் க. சொக்கலிங்கம் அவர்கள்
3. நாவலர் நூல்கள் — பண்டிதர் அ. பஞ்சாட்சரம் அவர்கள்

நன்றி கூறல்.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

வை. இரகுநாத முதலியார்
காரியதரிசி

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்.
3—12—71

## இளைஞர்களின் வளர்ச்சி

(பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்

பெற்றார், உபாத்திமார், இளைஞர்கள் ஆகிய முத்திறத்தவர்களின் கடமைகள்:

(முன் வளர்ச்சி — 2)

### 2. உபாத்திமார் கடமை

உபாத்தியாயர்கள் தங்களிடத்து ஒப்படைக்கப்பட்ட மாணவர்களை மாணுக்கர்கள் ஆக்குதலே மிகச் சிறந்த கடமையென்று உணரவேண்டும். குலன், அருள், தெய்வங் கொள்கை மேன்மை, கலைபயில்தெளிவு கட்டுரை வன்மை முதலிய உயர் குணங்கள் நிறையப் பெற்றவனே ஆசிரியனுவான். இக்காலத்தில் மேற்காட்டிய இலக்கணங்களையுடைய ஆசிரியர்கள் மிகமிகக் குறைவு. மாணவர் தங்களுக்குப் பயிற்றப்படும் பாடங்களைக் கவனிப்பது மல்லாமல், தங்கள் ஆசிரியரின் நடை, உடை, பாவனை முதலியவற்றையும் பின்பற்றக் கூடியவர்கள். ஆதலின் ஆசிரியர்கள் வாழ்க்கை இகழ்தலின்றிபுகழ்தலுடையதாயிருக்க வேண்டும்.

ஆதலின், ஆசிரியர்கள் மேற்காட்டிய நற்குணங்கள் மன்னிய உருவொடு கூடியவர்களாய் கல்வியூட்டப்படின் மாணவர் - மாணுக்கராவது நிச்சயம்.

### 3. இளைஞர் கடமை

இனி, இளைஞர்களின் கடமையென்ன என்பதைச் சற்றுக் கவனிப்போம். அறநெறியில் நின்று தெய்வவழிபாடு செய்து வாழ வேண்டியவர்கள் முதியோர்களே எனக் கருத இடமில்லை. இப்போது நாம் இளையோம். வயது முதிர்ந்தபோது அறவழியில் நிற்போம் 'எனக் கருதாது நாள்தோறும் அறஞ்செய்க'' என,

"அன்றறிவா மென்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றுத் துணை"
—திருவள்ளுவர்

என்னும் குறட்பாவில் அறிவுறுததுகிறார். இவ்

வளர்ச்சி 4-ஆம் பக்கம்

சைவ நற்சிந்தனை - 2.

## நல்லோர் இணக்கம்

— திரு. ச அம்பிகைபாகன் அவர்கள் —

(19-10-71-இல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பெற்றது.

நல்லோர் இணக்கத்தால் வரும் நன்மைகளையும் தீயோர் இணக்கத்தால் வரும் தீமைகளையும் விளக்கப் பல கதைகள் உண்டு.

ஒரு சிங்கக்குட்டி தனது கூட்டத்தை விட்டு பிரிந்து ஆட்டு மந்தையோடு சேர்ந்து ஆட்டின் தன்மையைப் பெற்று ஆட்டு மந்தையோடு திரிந்தது. இதை ஒரு கிழச் சிங்கம் கண்டு இளஞ் சிங்கத்தை ஆட்டு மந்தையிலிருந்து பிரிக்க திட்டம் போட்டது. இளஞ் சிங்கத்தைப் பார்த்து பின்வருமாறு கூறிற்று. "நீ ஒரு சிங்கம் அரச குலத்தைச் சேர்ந்தவன் இந்தச் சிறுபிராணிகளான ஆடுகளைச் சேர்ந்து அவைகளைப் போல நடப்பதைக் காண எனக்கு வெட்கமாகவிருக்கிறது. நீ என்னுடன் வா'' என்று கூறிற்று இப்படிப் பலமுறை கூறியும் இளம் சிங்கம் கேட்கவில்லை.

கிழச் சிங்கம் ஓர் உபாயம் செய்தது. இளஞ் சிங்கத்தைத் தனித்து ஒரு கிணற்றண்டை கூட்டிச் சென்றது. கிணற்றுக்குள் தான் எட்டிப் பார்த்துக் கொண்டு இளஞ் சிங்கத்

வளர்ச்சி 4-ம் பக்கம்

## தருமை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ கைலைக் குருமணிக்கு அஞ்சலி

தருமையாதீனத்தின் 25-ஆவது குருமகாசந்நிதானமாகவிளங்கிய ஸ்ரீலஸ்ரீ கைலைக் குருமணி. சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சென்ற மாதம் 10-ந் திகதி காசியில் பரிபூரணநிலை எய்தினார்கள். அவர், சிவநெறிக்கும் செந் தமிழுக்கும் ஆற்றிய சேவைகளைப் பாராட்டுமுகமாக, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ்ப் பகுதி ஓர் விசேட நிகழ்ச்சியைத தயாரித்து இம் மாதம் 5-ந் திகதி (5-12-71) ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 முதல் 9 வரை ஒலிபரப்ப ஏற்பாடு செய்துள்ளது முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. வி. கே. கந்தசாமி, முன்னாள் வடபெரும் பகுதிக் கல்விஅதிகாரி திருமதி இரத்தினநவரத்தினம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சமயத் துறை அதிகாரி திரு. அருள் தியாகராசா ஆகியோர் இதில் கலந்து இரங்கலுரை வழங்குவார்கள். (ந, நி.)

## ஈழத்துச் சிதம்பர புராணம் வெளியீட்டு விழா

பண்டிதர் இளமுருகனார் ஆக்கிய "ஈழத்துச் சிதம்பர புராணம்'' வெளியீட்டு விழா இம் மாதம் 18ம் திகதி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில், காரைநகர் சிவாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம ரனாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருதுஹு கார்த்திகைமீ கஅ-உ வெள்ளிக்கிழமை [1971]

## மரவரிமுறை நீக்கத்தை ஆதரிக்கின்றோம்

ஒரு கமக்காரன் வயலில் நெல்லை விதைக்கின்றான். ஆனால் பயிருண்டாகியவுடன் புல்லும் முளைத்திருக்கக் காண்கின்றான். அவன் புல் முளைப்பதற்குரிய விதைகளை விதைக்கவில்லை. புல் தானாகவே முளைக்கின்றது. உலகில் மக்களுக்கு புண்ணியத்தைச் செய்யுங்கள் என்றுதான் பெரியோர்கள் புத்தி கூறுவர். ஆனால் மக்கள் பாவங்களையும் செய்கின்றார்கள். தீமை செய்வதற்குப் பிரசாரம் தேவையில்லை. மக்கள் தீமைகளைத் தங்கள் ஆணவ மூனைப்பினாலே வலியச் செய்கின்றார்கள். நமது சமய நூல்கள் மக்களைப் பஞ்சமா பாதகங்களை விலக்கி வாழும்வண்ணமே உபதேசஞ் செய்கின்றன. கள்ளுண்ணல் பஞ்சமா பாதகங்களிலொன்றாகும். கள் மனிதனுடைய அறிவைக் கொள்ளை கொள்ளும். அறிவிழந்தவனை யாவரும் இகழ்வர். பெற்ற தாயும் மதிக்க மாட்டாள். கள்ளுண்பவன் சான்றோனாக முடியாது.

நமது நாட்டில் மரவரி முறை வந்ததற்குப்பிறகு கள்ளுண்பவர்கள் தொகை மிகவும் அதிகரித்துவிட்டது. குடியைப் பழகியவர்கள் அதனால் தாமடைந்த இன்னல்களை யுணர்ந்தும் அதனின்றும் தீர விடுபட முடியாமற் கஷ்டப்படுவதையும், தம் பிள்ளைகளோ நண்பர்களோ குடிப்பழக்கத்தை மேற்கொண்டு அலையக்கூடாது என்றும் அநுதாபத்துடன் கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். ஆரம்பத்தில் சிறிதளவில் கள்ளையருந்தப் பழகியவன் பின்பு சகல மதுவகைகளையும் அருந்தி மதியிழந்து அவற்றுக்கு அடிமையாகின்றான். கள்ளைக் குடிக்க விரும்புபவர்கள் அதனை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதியிருக்கின்றமையினால் முதியவர்களும் சில பெண்களும் சில மாணவர்களும் கள்ளருந்தும்பழக்கத்தைப் பழகிக்கொண்டார்கள். சில இடங்களில் சிலஆசிரியர்களும் மாணவர்களும் கௌரவமாகக் கள்ளருந்திச் செல்ல விசேட ஒதுக்கிடங்கள் அமைக்கப்பெற்றிருப்பதாகவும் பேசிக்கொள்கின்றார்கள். இத்தகைய சீர்கேடுகளை நீக்குதற்கு இதுநாள் வரை தகுந்த திட்டம் இயற்றப்பெறாமை நம் சமூகம் செய்துகொண்ட பாவமேயாகும்.

அரசாங்கம் இப்பொழுது மரவரி முறையை நீக்கச் செய்துள்ள தீர்மானத்தை மனப்பூர்வமாக வரவேற்கின்றோம். யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும் **மரவரி முறையை ஆரம்பத்திலிருந்தே கண்டித்து வந்துள்ளது. இப்பொழுது வரவு செலவுத் திட்டத்தில் யாழ்ப்பாணத்தில் மரவரி முறையை நீக்கியமையைச் சபை பாராட்டியுள்ளது.**

கௌரவ. நிதிமந்திரியவர்கள் முன்னொரு முறை தாம் நிதி மந்திரியாகக் கடமையாற்றிய காலத்தில் மரவரி முறையை தென்னிலங்கையில் கொண்டு வரத் தீர்மானஞ் செய்தபொழுது அங்குள்ள மத குருமாரும் பொதுமக்களும் அதனை மிகவன்மையாக எதிர்த்தனர், அதன் காரணமாக அவர் அத் தீர்மானத்தைக் கைவிட்டனர். அங்ஙனமாகத் தென்னிலங்கையிலுள்ள மக்கள் மரவரி முறையின் தீமையை யுணர்ந்திருக்கும் வேளையில் வட மாகாணத்தில் நம் மக்கள் அத்தீமையை உணராதிருப்பது விபரீதமாகவிருக்கின்றது.

> "கையறி யாமையுடைத்தே பொருள்கொடுத்து
> மெய்யறி யாமை கொளல்"

கள்ளுண்பவன் தன்பொருளைக் கொடுத்து முதலில் மதிமயக்கினால் மெய்யுணர்வை மறக்கின்றான். பின்பு எதனைச்செய்தல் சரி எதனைச்செய்தல் பிழையென்பதையும் உணராது மயங்குகின்றான்.

நாட்டில் அறிவு, அடக்கம், நல்லொழுக்கம் உள்ள மக்கள் தோன்றுதல் வேண்டும். அப்பொழுதுதான் நாடு சிறக்கும் அறிவு, அடக்கம், நல்லொழுக்கம் ஆகிய பண்புகளை அழிக்கின்ற கள்ளையருந்தினால் நாடு எவ்வாறு சிறந்து விளங்கும்? நாட்டில் கொலை களவு, பொய் முதலிய தீமைகளே பரவும். நாடு சமாதானமாக விளங்குதற்கு மரவரி முறை நீக்கப்பெறுதலுடன், பூரண மதுவிலக்குத் திட்டமும் வேண்டும்.

## கலைப்புலவர் நவரத்தினத்தின் நூல் நிலையம்

யாழ்ப்பாணத்தில் சிறந்த கல்விமானாகவும் கலைவல்லுனராகவும், பக்திமானாகவும், சமயசாதனைகள் மூலம் ஞானத்தைப்பெற முயன்றவராகவும் சமயம் தத்துவசாத்திரம் கலை முதலியன சம்பந்தமாகப் பல நூல்களை வெளியிட்டவருமாகிய கலைப்புலவர் நவரத்தினம் அவர்களை யாவரும் அறிவர். பிரப்பங்குளம் வீதியிலுள்ளமடம் ஒன்றில் கலா நிலையம் என்ற ஸ்தாபனத்தை நிறுவி அதில் கலை, சமயம், இலக்கண இலக்கிய சம்பந்தமாக கருத்துக்களை மக்கள் பெறக் கூடியதாக அதனை நடத்தி வந்தனர். அறிஞர்களுடைய விரிவுரைகள், வகுப்புகள், ஞாயிறு என்னும் சஞ்சிகையை வெளியிடுதல் முதலிய தொண்டுகளை அம்மடத்தில் கலைப்புலவர் செய்து வந்தனர். அத்தாபனத்தில் ஒரு சிறந்த நூல் நிலையத்தையும நிறுவி வைத்தனர். பிற்காலத்தில் கலா நிலையத்தொண்டுகள் நடைபெறுதொழிந்தன. அவருடைய நூல் நிலயம் அவருடைய கிருகத்திற்கு மாற்றப்பட்டது. அவருடைய நூல் நிலையத்தில் விலையுயர்ந்த தேடுதற்கரிய நூல்கள் உள்ளன. இந் நூற்றொகுதியை ஒரு சங்கம் விலைக்குப் பெற்றுள்ளதாக அறிகின்றோம்.

## நல்லூர்க் கந்தசுவாமி நூல்அறிமுக விழா

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நவம்பர் மாதம் 21ஆம் திகதியன்று மேற்படி அறிமுக விழா நடைபெற்றது.

இதில் ஓர் அம்சமாக நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சம்பந்தமான பழைய நூல்களும், படங்களும், புகைப் படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவ் விழா அமைப்புக் குழுத் தலைவரான திறைசேரி நிதி இயக்குநர் திரு. க. சிற்றம்பலம் வரவேற்புரை நிகழ்த்தியபோது "இந் நூலில் நாவலர் சம்பந்தமான சில குறிப்புகள் சேர்க்கப்படவில்லை என சிலர் குறை நினைப்பதாகக் கேள்வியுற்றேன். அவர்களுக்கு ஒரு வார்த்தை "தயவுசெய்து நூலாசிரியரின் முகவுரையை அவதானத்துடன் படித்துப் பாருங்கள்" எனக் கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து, கலாசார அலுவல் நிரந்தரக்காரியதரிசி திரு. நிசங்க விஜயரத்ன அவர்கள் விளக்கேற்றி நூற் காட்சியைத் திறந்து வைத்தார்.

> 'சிங்கள பௌத்தர்களையும் தமிழ் இந்துக்களையும் ஒன்றிணைக்கவல்லது முருகவழிபாடுதான்' என யோகர் சுவாமிகள் எமக்கு ஒருபோது கூறியுள்ளார்.

இந்நாட்டின் கலாசாரம் மறுமலர்ச்சி பெற்றுவரும் இக்காலத்தில் இத்தகைய நூல் வெளிவந்துள்ளமை பெரிதும் வரவேற்றத்தக்கது எனக் குறிப்பிட்டார் திரு. விஜயரத்ன.

விழாவிற்குத் தலைமை தாங்கிய முன்னைநாள் நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பறறிய வரலாறு இதுவரையில் எவராலும் ஆராய்ச்சிக் கண்ணுடன் எழுதப்படவில்லை அக்குறையினை இந்நூல் ஈடுசெய்கின்றது என்றார்.

மாட்சிமை தங்கிய மகா தேசாதிபதியின் வாழ்த்துரையும், கோவில் அறககாவலரின் ஆசியுரையும் விழாக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டன.

நூலின் முதற் பிரதியை ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி திரு எஸ். கே. இராசசிங்கம் அவர்கள் வாங்கினார்கள்

திரு. இராஜசிங்கம் அவர்கள் தமது உரையில், நூலாசிரியருக்கும தமக்கு இடையில் நீடித்துவரும் நெடுங் காலத் தொடர்பைக் குறிப்பிட்டு நூலாசிரியர் நாற்பது ஆண்டுகள் பதவியிலிருந்து பணி புரிந்த நாட்களிலும் பார்க்க, ஓய்வுபெற்றுள்ள இந்நாட்களில் தான் முன்னரிலும் பார்க்க மூனைப்பாக உழைக்கிறார் எனக் குறிப்பிட்டார்.

முன்னைநாள் நிரந்தரக் காரியதரிசியும், கொழும்பு விவேகானந்த சபைத் தலைவருமான திரு, கோ. ஆழ்வாப்பிள்ளை, அனைத்திலங்கை இந்து இளைஞர் சங்கத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய திரு. எம். சிவசிதம்பரம், கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும், முன்னைநாள் நிரந்தரக காரியதரிசியுமான திரு. கு. பாலசிங்கம், திரு. வே. கணபதிப்பிள்ளை, கலாநிதி பொ. பூலோகசிங்கம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன உதவி மா அதிகாரி திரு. கே. எஸ். நடராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

ஸ்ரீமதி சியாமளா புண்ணியமூர்த்தியின் மாணவிகளும், திருமதி தேவகி குமாரசுவாமியும், திரு தி. மாணிக்கவாசகரும் தோத்திரப் பாடல்கள் பாடினர்.

நூலாசிரியர் தமது நன்றியுரையின்போது, "எனக்கு வயதாகிவிட்டது. கோவில் வரலாற்றில் முரண்பாடுகள் இருப்பின் இன்றைய இளைஞர்கள் பொறுமையுடன் ஆராய்ச்சி நிகழ்த்தி, மேலும் பல நூல்களை வெளியிட வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார்.

## தேசாதிபதியின் வாழ்த்துரை

[முதலியார் குல சபாநாதன் எழுதிய "நல்லூர்க் கந்தசுவாமி" எனும் நூல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நவம்பர்மாதம் 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் முன்னாள் நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் வெளியிடப் பெற்ற பொழுது, மாட்சிமை தங்கிய மகாதேசாதிபதி விடுத்த ஆசிச்செய்தி வருமாறு:]

"இராணி மாளிகை"
கொழும்பு. (இலங்கை)
1971 நவம்பர் 20-ம் திகதி

"நல்லூர்க் கந்தசுவாமிகோவிலைப் பற்றிய நூல் வெளியிடப்பெறும் சந்தர்ப்பத்தில் நல்லாசிச் செய்தியை அனுப்புவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியுறுகின்றேன். நல்லூர் யாழ்ப்பாண அரசர்களின் இராசதானியாகவும், வட இலங்கையின் தலைநகராகவும் விளங்கியதென்பது யாவரும் நன்கறிந்ததொன்று. இங்குள்ள கந்தசுவாமி கோவில் இலங்கையிலுள்ள புராதன ஆலயங்களுள் ஒன்றாகும். கோட்டை அரசனான புவனேகவாகு பதினைந்தாம் நூற்றண்டில் இவ்வாலயத்தைக் கட்டுவித்தான் என யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. இந்த ஆலயத்தினை இலங்கையின் பல திசைகளிலுமுள்ள பக்தர்கள் ஏத்திப் போற்றிப் பாராட்டுகின்றனர். ஆண்டு தோறும் ஆவணிமாதத்தில் மகோற்சவம் நடைபெறுங் காலத்தில், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சென்று வழிபடுகின்றனர்.

இன்று இந்நாடெங்கணும் பண்பாட்டு, சமய மறுமலர்ச்சி இடம்பெற்று வரும் இச்சமயம், இந்தக் கோவிலைப் பற்றி சரித்திர சம்பந்தமாகவும், சமய சம்பந்தமாகவும் முக்கிய விரிவான நூல் வெளிவருவது ஒரு நற்சகுனமாகும்.

இந்நூலின் அம்சமர்களிளங்கும் ஆழ்ந்த புலமைக்கும் பக்திச் சூழலுக்குமாக இந் நூலாசிரியருக்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்ஙனம்
**வில்லியம் கோபல்லாவ**
மகாதேசாதிபதி

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழா

யாழ். நாயன்மார்கட்டு, சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரிஅம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 8-12-71 புதன்கிழமையன்று ஆறுமுகநாவலர் குருபூசையை ஷை கழகத் தலைவர் திரு க. சோக்கலிங்கம் அவர்கள்தலைமையில் வழமைபோலச்சிறப்புறநடாத்தவுள்ளனர்.

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ: இல. 10642

காரணவாய் வடக்கு 1. ஆறுமுகம் பொன்னையா 2. கந்தையா வயிரமுத்து 3. பெண் சடைச்சிப்பிள்ளை 4 ஆறுமுகம் மகள் கதிராசி —வழக்காளிகள்

எதிராக

காரணவாய் தெற்கு V. நாகலிங்கம் கந்தையா —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டாலெனக்குக் கிடைத்த கொமிசன் அதிகாரப்படியுமிதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்குமாதனத்தை 1971-ம் ஆண்டு மார்கழி மாதம் 20ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10மணியளவில் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோவிற்பற்று காரணவாய் வீரபத்திராயன் குறிச்சி கோணுவலையும் கொம்பன் சேவிற்கொல்லை கோணுவளையும் இது உவாந்தர் மேஸ்திதர் வி. சிவரெத்தினத்தால் 1962 ம் ஞு ஐப்பசி மீ 2 ந உ 2233 ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படியும் பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டின் 7016 ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்டதுமான படத்தின்படி 13 ம் நம்பர் துண்டுக்கு நிலா, 4. குளி 3 26/32 எல்லை கிழக்கு ருேட்டு. குறித்த படத்தில் 12 ம் நம்பர் துண்டு வடக்கு குறித்த படத்தில் 12 ம் நம்பர் துண்டும் சிவகுருநாதன் பெண் விஷயலிங்கட்சுமிக்குரியவாதனமும். மறுபேருக்குரியவாதனமும். மேற்கு இராமலிங்கம் கந்தையாவின் உருமைக்காரருக்கும் மறுபேருக்குரியவாதனமும். தெற்கு முருகேசு கைம்பெண் சேதுப்பிள்ளைக்குரியவாதனம். இதடங்கலும்.

| | |
|---|---|
| கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா | 6.000/- |
| தீர்வைத் தொகை | 8900—00 |
| வட்டி ரூபா 5000/- க்கு 9 வீதப்படி 26-9-69 தொடக்கம் 10-10-70 வரை | 487—50 |
| வட்டி ரூபா 9,387—50 க்கு 5 வீதப்படி 16-10-70 தொடக்கம் 1-10-71 வரை | 469—33 |
| கோட்டுச் செலவு | 301—33 |
| தொகை | 10,158—20 |

இன்னும் 1-10-71 தொடக்கம் விற்பனவு திகதி வரையும் ரூபா 9.387—50 க்கு 5 வீத வட்டியும்

'சந்நிதி வேல்'' கா. முத்துக்குமாருஐயர்
பருத்தித்துறை, கொமிசனரும் விலைமதிப்பாளரும்
9—11—71. எம். 323. 2-12-71,

## கோட்டு விற்பனவு விளம்பரம்
யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
வழக்கு இல: M. B. 9850

யாழ்ப்பாணம். பருத்தித்துறை வீதி,
கணபதிப்பிள்ளை விசுவலிங்கம் —வழக்காளி

எதிராக

1 புங்குடுதீவு. புங்குடுதீவு மேற்கு, கந்தையா சுந்தரமும்
2 ஷை பெண் பத்மாவதியும் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 9850-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1972-ம் ஞு தை மாதம் 19-ம் திகதி (19-12-71) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3185/— இதில் ரூபாய் 2000/—க்கும 24—3—68 தொடக்கம் 30-10-68 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 339-02 (செலவழித்த செலவு ரூபா 236—45. வெலியாத்துச் செலவு ரூபா 51/- எதிர்வரும் செலவு ரூபா 51—57)

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி புங்குடுதீவு காவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "மாணுவலைக்கும் பாலைத்தோட்டத்திற்கும்தெற்கு'' Manavalaikkum Palaith-thoddaththitkum thetku) பர கில. 17 கிணறும், வான்பயிர்களும் எல்லை கிழக்கு கந்தையா பெண் பரிபூரணத்திற்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு விசுவநாதர் மகள் தையலம்மையினுதனம், மேற்கு நாகமணி கந்தையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு நல்லதம்பி செல்லத்துரையினுதனம், இதடங்கலும்.

2 ஷை புங்குடுதீவு மேற்கிறை 'மாணுவலை' (Manavalai) பர. கில. 24ம். வான்பயிர்களும் எல்லை கிழக்கு வயித்திலிங்கம் பெண் அருந்தவமணிக்கும் மறுபேருக்குமுரியஆதனங்கள், வடக்கு விசுவநாதன் மகள் தையலம்மைக்குமுரிய ஆதனம். மேற்கும் தெற்கும் ஒழுங்கை. இதடங்கலில் சொரியலாய் அரைவாசி

3 ஷை புங்குடுதீவு மேற்கிறை 'நுணுக்கல்' (Nunukkal) பர. கில. 32 எல்லை கிழக்கு இளையவன் மாதவனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு செல்லப்பா அருணாசலத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு குளம், தெற்கு சின்னத்தம்பி குருமூர்த்திக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதடங்கலும் சொரியலாய் அரைவாசி.

க. சுப்பிரமணியம்
நம்: 24, 1-ம்குறுக்குத் தெரு, கொமிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 5-11-71 M. 329 3-12-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்
D. C. J.

வழ: இல. M B 10780
செல்லர் கனகு.
அராலி வடக்கு —வழக்காளி
எதிராக
கதிர்காமு கந்தையா
அராலி வடக்கு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10780-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1971ம் ஆ மார்கழி மீ 23-ம் திகதி (23-12-71) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 2215-56ம் 28-4-69தொடக்கம் 27-11-69 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 323—16 இதில் ரூபாய் 100/- செலவில் கொடுக்கப்பட்ட தொகையை கழிக்கவும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று அராலி வடக்கிறை புங்கடை செ. பர. 4 (நாலு செ. பர.) இளம் வடலிகளும் வீடும் எல்லை கிழக்கு அம்பலவன் ஆறுமுகத்தானின் உருமைக்காரரின் ஆதனம். வடக்கு கணபதியார் சின்னத்தம்பியின் சகோதரர்களினதும், சகோதரிகளினதும் ஆதனம், மேற்கு சின்னப்பா கைம்பெண் ஆராசம்மாவின் ஆதனம், தெற்கு கயிலாயபிள்ளை கைம்பெண் பகவதியின் உரிமைக்காரரின் ஆதனம்.

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
'வேல்பதி'
புத்தூர். 15—11—71 327—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்
யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழக்கு இல, M B 11599

இரும்பவீட்டி (1) தம்பிப்பிள்ளை ருஜரெத்தினமும்
(2) பெண் செல்வ லக்ஷ்மியும் —வழக்காளிகள்
எதிராக
காங்கேசன்துறை பூதன் சின்ன ராசா —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11599ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971ம் ஞு மார்கழிமீ 23ம் உ வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 1300/— இன்னும் ரூபா 1000-திதுக்கு 31-3-70 தொடக்கம் 28-8-70 வரைக்கும் 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 356—41 சதமும், இதில் ரூபா 200/— கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பிரிவு தெல்லிப்பளைக் கோவிற்பற்று பழையிறை 'செம்பொன்தலை மடயன் வயல்' பர. நில. இலா 4½ இதற்கெல்லை கிழக்கும் தெற்கும் கந்தசாமி பெண் பாக்கியத்தினுதனம். மேற்கு ருேட்டு வடக்கு தண்ணீர் வாய்க்கால். இதடங்கலில் பிரிபடாத 1/3 பங்குமதைச் சேர்ந்தவைகளும்.

செ. விசாகரெத்தினம்
கொம்மிஷனர்& விலைமதிப்பாளர்
133 பருத்தித்துறை ருேட்டு.
நல்லூர் யாழ்ப்பாணம் 6-11-71
எம். 324 3—12—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்
யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் வழ: இல. M. B 11382

காம்பன் வார்காவற்துறை டி. எ ருசைபாபிள்ளை கைம்பெண் எலிஸபெத் முத்தம்மா —வழக்காளி

எதிராக

1 ருமர் நாகமுத்து (காலஞ்சென்றவர்)
2 கைம்பெண் செல்லக்கண்டு (காலஞ்சென்ற முதலாம் எதிரியினுதனங்களின் தத்துவ பிரதிநிதியாக)
3 ஐயம்பிள்ளை கந்தசாமி, எல்லோரும் வேலணை கிழக்கு வேலணை. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11382-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1971-ம் ஆண்டு மார்கழி மாதம் 20-ம் திகதி (20—12—71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும், 10-30 மணிக்கு இரண்டாம் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 5504-00 இன்னும் ரூபாய் 4000/-க்கு 17—1—70 தொடக்கம் 20-5—71 வரைக்கும் 18% வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 661—55 இதில் ரூபாய் 94—50 கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பிரிவு வேலணை கோவிற்பற்று வேலணை கிழக்கிறை பர. கில. இலா. 20 — 0 'தலைக்காடு' பனை மரங்கள் வடலிகள் தென்னை மரங்களுடன் கிணறு இதற்கெல்லை கிழக்கு முத்தன் சடையனுக்கும் பெண் நாகம்மாவுக்குமுரியவாதனங்கள், வடக்கு ருேட்டு மேற்கு சின்னத்தம்பி ஆறுமுகத்தினுதனம், தெற்கு ராமலிங்கம் பெண் பூபதியினுதனம் இதடங்கலும். பதிவிலக்கம் C 298/164

ஷையூர் 'மூடவன்தோட்டமும் கடற்கரைவயலும்' பர.வி. லா 7¾ கல்வீடு, பனை தென்னை மரங்களுடன் இதற்கெல்லை கிழக்கு நாகனுதன் செல்லனுக்கும் பங்காளருக்குமுரியவாதனம், வடக்கு நாகனுதன் செல்லனுக்குரியவாதனம், மேற்கு ருேட்டு, தெற்கு பிரயோசனமற்ற காணி இதடங்கலும். பதிவிலக்கம் C 332/198

133 பருத்தித்துறை ருேட்டு, செ. விசாகரெத்தினம்
நல்லூர், யாழ்ப்பாணம், கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
25—11—71 எம். 326 3-12-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்
யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ: இல. M B 10906

தாவடி 1. செல்லையா சிவப்பிரகாசமும்
2. பெண் பாக்கியலட்சுமியும் —வழக்காளிகள்
எதிராக
தாவடி, கொக்குவில் தற்பொழுது தம்பிராய் பூனகரி.
சரவணமுத்து கந்தையா நாகரத்தினம் —எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற M. B. 10906-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971-ம் ஞு மார்கழி மாதம் 22-ஆம் திகதி (22-12-71) புதன்கிழமை முற்பகல் 10-30 மணியளவில் என்னால் அக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 1910/- இன்னும் ரூபாய் 1000/—க்கு 23—6—69 தொடக்கம் 24 9—70 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 337—16 சதம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பிரிவு உடுவில் கோவிற்பற்று தாவடியிறை "இலகடி" பர. கில. இலா. 7 — 0 இதில் மேற்காலை பர. கில, இலா. 3½ மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புருத்தும் இதற்கெல்லை கிழக்கு கந்தையா மார்க்கண்டுவுக்குமுரிய மிகுதியாதனம். வடக்கு ருேட்டு மேற்கு தம்பிராசா ராஜநாயகத்துக்குரியவாதனம் தெற்கு சரவணமுத்து கந்தையாவின் உரிமையாளரினுதனம், இதடங்கலில் மேற்சொல்லப்பட்ட கிணற்றில் கிழககெல்லைக்காரனுக்கு வழிவாய்க்கால் பாவிப்பதற்கு முழு உரிமையும்.

செ. விசாகரத்தினம்
133, பருத்தித்துறை ருேட்டு, கொமிஷனர் & விலைமதிப்பாளர்
நல்லூர், யாழ்ப்பாணம். 23-11-71 எம் 325-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்
யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழக்கு: இலக்கம். M B 9737

யாழ்ப்பாணம். கந்தையா துரையப்பா —வழக்காளி
எதிராக
மண்டைதீவு பொன்னம்பலம் சிதம்பரநாதன் கைம்பெண் சொர்ணம்மா தனது காலம்சென்ற கணவனின் ஆதனங்களின் தத்துவபிரதிநிதியாக —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9737-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆ மார்கழி மீ 21-ம் திகதி (21—12—71) செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 12000/- இன்னும் 25—5—69 தொடக்கம் முழுத்தொகை இறுக்கும் வரை 5 வீத வட்டியுடன் கோட்டுச்செலவு ரூபாய் 549-35 சதம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பிரிவு அல்லைப்பிட்டி கோவிற்பற்று மண்டைதீவிறை "கடவருயன்தம்பிரையும் முனதிடம்பிரையும்' பர. கில. இலா. 4 - 3½ குளி ஷை யூர் டம்பிரையும் மறுபிரிவுகளும்' பர. கில. இலா. ¾ - 0 குளி ஷை யூர் 'டம்பிரையும் பர. கில. இலா. 2, 7/8 - 0 குளி இம்மூன்று ஆதனங்களும் ஒன்ருய் கூடி முழு உரிமை கொண்டு சொல்லப்படும் 'டம்பிரை'என்னுமாதனம் பர. கில. இலா. 7-14,5/8 குளி கல்வீடு கிணறு செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு ராசலிங்கம் பெண் முத்துமணிக்கும் நடராஜா பெண் செங்கமலத்துக்குமுரியவாதனம், வடக்கு ருேட்டு மேற்கு ருேட்டு தெற்கு விநாயகமூர்த்தி திருநாவுக்கரசுவுக்குமுரியவாதனம். இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

செ. விசாகரெத்தினம்
183, பருத்தித்துறை ருேட்டு, கொமிஷனர், விலைமதிப்பாளர்
நல்லூர் - யாழ்ப்பாணம். 30—7—71 எம் 328 3—71

## நல்லோர் இணக்கம்

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

தையும் எட்டிப் பார்க்கச் செய்தது. அப்பொழுது தான் இளஞ் சிங்கம் கிழச் சிங்கம் சொல்வது சரியென உணர்ந்து அதனுடன் கூடிச் சென்றது.

வேட்டையாடச் சென்ற ஓர் அரசகுமாரன் வேடுவர்களுடன் தங்கிவிட்டான். வேடர்களின் சேர்க்கையால் அவன் அரச குணங்களை யெல்லாம் இழந்து வேடுவர் போல் நடக்கத் தொடங்கி விட்டான். அவர்களுடைய இழிதொழில்களை யெல்லாம் செய்தான். மன்னவன் தனது மகனின் இழிதொழில்களைக் கண்டு இரங்கினன் அவனுக்கு வயதுவந்ததும் மன்னவன் மகனுக்கு பலவகையாக அறிவுறுத்தி "நீ வேடனல்லன் நீ அரசகுமாரன் சகவாச தோஷத்தினல் இந்நிலையை அடைந்து விட்டாய்" என்று கூறி அவனைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். இதைச் சிவஞான சித்தியார் செய்யுளொன்று பின் வருமாறு கூறுகின்றது.

"மன்னவன் தன் மகன் வேடரிடத்தே தங்கி
வளர்ந்து அவனை யறியாது மயங்கி நிற்ப
பின்னவனும் என் மகன் நீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையோடு தானாக்கிப் பேணுமாபோல்."

திருவள்ளுவரும் சிற்றினம் சேர்வதால் ஏற்படும் தீமையைப் பல குறள்களில் விளக்கி யுள்ளார். நீரின் சுவையானது அது சேரும் நிலத்தைப் பொறுத்துள்ளது நன்நிலத்தைச் சேர்ந்தால் நன்னீராகவும் உவர் நிலத்தைச் சேர்ந்தால் உவர் நீராகவும் இருப்பதைக் காண்கின்றோம். அது போல மனிதனும் தான் சேரும் இனத்தின் தன்மையைப் பெறுவான். ஆகவே மனிதன் தான் சேரும் இனத்தைப் பற்றி மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

"நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றே மாந்தர்க்கு
இனத்தியல் பதாம் அறிவு."

மனிதன் சாதாரணமாகத் தனது அறிவும் குணங்களும் தனது மனத்திலிருந்து உதிக்கின்றனவென எண்ணுகின்றான். ஆனல் கூர்ந்து பார்த்தால் அவன் சேருகிறவர்களின் தன்மைக்கேற்பவே அவன் அறிவும் திரியுமென்பதை உணரலாம். "மனத்துள பேரலக்காட்டி ஒருவற்கு இனத்துளதாகும் அறிவு.

இவற்றின் காரணமாகவே ஆன்மா சார்ந்ததின் வண்ணமாகின்றது என்று சைவ சாத்திரங்கள் கூறுகின்றன.

"நல்லார் இணக்கமும் நின் பூசை நேசமும்
அல்லது வேறு நிலையுள்ளதோ"

எனப் பட்டினதாரும் பாடியுள்ளார்.

## இளைஞர்களின்...

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

வாறு அறவழியில் நின்று நன்மையடைவதற்கு உடல் நன்கு அமைய வேண்டும்.

(வளரும்)

நேயர் நெஞ்சம்

# இலவுகாத்த கிளிகளோ நாம்......!...?

ஐயா,

நாவலர்பெருமான் சிலைப் பவனி கொழும்புமா நகரிலிருந்து ஆரம்பமாகி, யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் மணி மண்டபம் வரையும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும அதையொட்டி கோலாகலமாக நிகழ்ந்த நாவலர் மாநாட்டு நிகழ்ச்சிகளும் அவ் வேளையில் திரைப்படமாக எடுக்க நடவடிக்கை எடுத்திருந்தார்கள். அச்செயலை அந் நாட்களில் பல பெருமக்கள் வாயாரப் புகழ்ந்து போற்றியதைக் கேட்டு உள்ளங் குளிர்ந்தவர்களில் யானும் ஒருவன். இந்தவிதமான சரித்திரப் பிரசித்தி வாய்ந்த ஒரு நிகழ்ச்சியை நமது எதிர்காலச் சமூதாயம் திரையில் கண்டு பேரானந்த மடைவதற்கு இது ஒரு வாய்ப்பென்றும், இச்சிலைப்பவனி நிகழ்ச்சித் தொகுப்பைக் கிராமந்தோறும் காண்பிக்க நாவலர் சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அத்துடன் நில்லாது, தமிழர்கள் சைவமக்கள் வாழும் பிற நாடுகளிலும் நாவலர் பணிகளைப் பரப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுதற்கு இச் சிலைப் பவனியை வெளிநாடுகளிலும் திரையிடப்படக்கூடிய ஒழுங்கு செய்யச் சபையைக கேட்கவேண்டும் என்றும அந்த நாட்களில் பெருமையுடன் மக்கள் பேசக் கேட்டதும் இவ்வளவு அபிமானச் செல்வர்கள் நம்மிடையுள்ளார்களேயென் றெண்ணினேம். ஆனல் நாம் துரதிர்ஷ்டசாலிகள்தானு? அந்நாள் நிகழ்ச்சிகளைக் காண இன்று எத்தனையோ உள்ளங்கள் துடித்துக்கொண்டிருக்கின்றன. குறிப்பிட்ட படம் இதுவரை திரையிடப்பட்டதாகத் தெரியவில்லை? சமீபத்தில் ஈழத்துக்கு வருகை தந்த வணக்கத்துக்குரிய, பரிசுத்த பாப்பரசரின் நிகழ்ச்சிகள் படமாகக் காட்டுகின்றார்கள். அதைக் காணும் பேறு பெற்றோம்; நாவலர் சிலைப் பவனியைப் பார்க்க இதுநாள்வரையும் வாய்ப்பு ஏற்படவில்லையே! அதை 'திரையிட்டு நிதி திரட்டி அவரது நினைவுகளாய திருமுறைப் பள்ளி ஆகிய பணிகளை நிறைவு செய்யக் கூடாதா?' என்று பலரும் பேசிக் கொள்கின்றார்களே! ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையார் இப் படத்தினைத் திரையிட நடவடிக்கைஎடுப்பார்களா? அன்றேல், நாம இலவு காத்த கிளிகள் தாமோ......! .......?

கா. இரகுநாதன்
நாவன்மார்கட்டு, 1-12-71

## ஏழூர் இராசரத்தினம் நினைவு விழா

1-12-71 புதன்கிழமை இளவாலை மெய்கண்டான் வித்தியாசாலைத் தாபகர் ஏழூர் இராசரத்தினம் அவர்களது நினைவு விழா வடமாகிலக்கல்வியதிகாரி திரு, W D. C. மகாதந்தில அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## விவேகானந்த சபை

1-ஆம் பககத்தின் வளர்ச்சி

றார்கள். இப்பரீட்சைக்குத் தேவையான புத்தகங்கள் பலவற்றை அச்சபையார் எழுதி அச்சிட்டு வெளியிடுகின்றனர்.

இத்தேர்வுக்குத் தோற்றும் மாணவர் தொகை ஆண்டு தோறும் பெருகிக்கொண்டு வருகின்றது. இவ்வாண்டு அனைத்திலங்கையிலும் பாடசாலை மாணவர்களும், பிரத்தியேகமாகச் சில மாணவர்களுமாக மொத்தம் 67,120 மாணவர்கள்வரை தோற்றியுள்ளதாகவும், சென்ற ஆண்டிலும் பார்க்க இவ்வாண்டு 16,120 மாணவர்கள் கூடுதலாகத் தோற்றியதாகவும் சபையின் பரீட்சைச் செயலாளர் திரு. சி. கந்தசாமி வெளியிட்ட அறிக்கை கூறுகின்றது.

விவேகானந்த சபையார் இப் பரீட்சையோடு தொடர்பாக சைவப் பெரியார்கள், சைவசமயம் பற்றிய கட்டுரை பேச்சுப்போட்டிகளையும் மாணவரிடையே நடாத்துகின்றனர்.

அச்சபையார் பரீட்சையிலும், கட்டுரை, பேச்சுப் போட்டி முதலியவற்றிலும் தேறியவர்களுக்குச் சான்றிதழ்களும் விருதுகளும், திருமுறைநூல்கள், சைவப்பெரியார்கள் எழுதிய சைவசமய நூல்கள்கள் ஆகியவற்றைப் பரிசில்களாகவும் வழங்குகின்றனர்.

சிங்கள ஊரிகளிலுமுள்ள சைவ மாணவாகளும் இத்தேர்வுக்குத் தோறறுகின்றனர். எடுத்துக்காட்டாக, 1971-ம் ஆண்டு பத்தாம் வகுப்புக்கான சமயத் தேர்வில் அனைத்திலங்கையிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுள் மூன்றும் இடத்தைப் பெற்றவர், சிங்களவர் பெரும்பாலும் வாழும் களுத்துறையிலிருந்து தோற்றிய ஒரு மாணவியாவர். எனவே, சைவர்கள் ஈழத்தின் எப்பகுதியில் வாழ்ந்தாலும், அங்கெல்லாம் இப்பரீட்சையை நடாத்துவதற்கு விவேகானந்த சபையார் மேன்மேலும் முயற்சி செய்வார்களென்றே எதிர்பாக்கின்றோம்.

வாழ்க! விவேகானந்த சபை!!
வளர்க அதன் சைவப்பணிகள்!

—0—

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

பாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 3—12—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல. M. B 11116

சபாபதிப்பிள்ளை சிவப்பிரகாசமும் பெண் சோதிப்பிள்ளை அல்லது பாக்கியமும் கூடுவில் தெற்கு சுன்னுகம் —வழக்காளிகள்

எதிராக

நாகலிங்கம் சிவசாமியும் பெண் இராசம்மாவும் —நல்லூர் தற்பொழுது 149/7 அரசடிவீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 11116-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1971-ஆம் ஆ. மார்கழி ௴ 30-ம் திகதி (30-12-71) வியாழக்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 15,120/-ம் 20-9-69 தொடக்கம் 9 1-70 வரைக்கும் ரூபா 10,000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 435-01.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயிற்பற்று நல்லூர் இறை "நீர்தொசியொடி அல்லது "நீர் நூலடி" உறுதிப்படி நில டீ 10 ஆறுல் உத்தரவு பெற்ற உலாந்தா J. D. வீரசிங்கம் 28—1—48 இல் அளந்து தயாரித்த 2442 இலக்கப் படத்தின்படி நி. பர. 11 குலி 11ம் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு வயித்திலிங்கம் கதிரவேலுவுக்குரிய ஆதனம, வடக்கு மாணிக்கம் நாகலிங்கத்துக்கும் பெண் சாதிக்குமுரிய ஆதனமும் கையொழுங்கையும் மேற்கு இந்தக் காணிக்குரிய ஒழுங்கையும் வடக்கில் இருக்கும் காணிச் சொந்தக்காரர் இந்தக் காணியில் பாவிப்புரித்துப் புற நீங்கலாகவும் தெற்கு இரண்டாம் எட்டுக்காரி நாகலிங்கம் சிவசாமி பெண் இராசம்மாவுக்குரிய ஆதனமும் துரையப்பாவுக்குரிய ஆதனமும்.

22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

நீ. அன்ரனிப்பிள்ளை,
கொம்மிஷனர் & விலைமதிப்பளார்
எம். 331—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 11863

கந்தையா கணபதிப்பிள்ளை. கட்டுவன் —வழக்காளி

எதிராக

1. முருகன் வயிரமுத்து பெண்
2. லெட்சுமி இருவரும், கட்டுவன் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11863-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971ம் ஆண்டு மார்கழி மாதம் 13 (13-12-71) திங்கட்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1051-50ம், 20-7-70 தொடக்கம் 11—3—71 வரைக்கும் ரூபா 700/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 325-15

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று கட்டுவனிறை வாரிக்குடியா வழவு பர. கில. லா. 4 (V. C.) பனைகளும், வீடும், செய்பயிர் வான்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு ஒரடிப்பாதை (நடைபாதை) வடக்கு வேலன் முத்தனுக்கும் தெய்விக்குமுரிய ஆதனம், மேற்கு விஞசி பெண் தெய்விக்குமுரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை, இதில் சொரியலாய் 7/16 பங்கும் அதற்குச் சேர்ந்தவைகளும்,

"கமலபதி"
ஆஸ்பத்திரிவீதி,
மண்டைதீவு. 18-11-71

மு. நவரத்தினராசா
கொமிசனரும், விலைமதிப்பாளரும்,
எம். 330 3—12—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

T. ருத்திரமூர்த்தியும் பெண் தெய்வானையும் சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் —வழக்காளிகள்

வழ. இல: M B 9769 எதிராக

வேலுப்பிள்ளை செல்வரத்தினமும் பெண் நல்லம்மாவும் நல்லூர், யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9769 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1971-ம் ஆண்டு மார்கழி ௴ 31ம் திகதி (31-12-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 9362-40ம், 28-2-68 தொடக்கம் 10—2—69 வரைகரும் ரூபாய் 7520/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 427-10

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "லுவிசுவளவு" கி. பர. 3 குளி $1\frac{1}{2}$ வீடும் கிணறும் பயிர்வகைகளும் மேற்குச் சுவரிலிருந்து கூரை இறக்கும் உரித்தும் எல்லை கிழக்கு சபாபதி கந்தரின் ஆதனம், வடக்கு டூருசர் இளையவி செல்லனின் ஆதனம், மேற்கு குறித்த இளைவிகரும் சங்கரப்பிள்ளைக்குமுரிய ஆதனம், தெற்கு றேட்டு. பதிவு இல: D. 324/97

2. ஷை நல்லூர் இறை 'வினைதீத்தான் வளவு' கி. பர. 4 எல்லை கிழக்கு கையொழுங்கை வடககு ஒழுங்கையும் குணமலை பெண் பாக்கியததின் ஆதனமும். மேற்கு காதர் ஆறுமுகத்துக்கும் அப்பாப்பிள்ளை பொன்னுத்துரைககுமுரிய ஆதனம். தெற்கு செல்லர் நடராசாவுக்குரிய ஆதனம், தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் 5 முழ அகலப் பாதையால் வழிவாய்க்கால் உரித்தும். பதிவு இல: D. 256/188

நீ. அன்ரனிப்பிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்

22. கோவில் வீதி
யாழ்ப்பாணம்.

எம். 332 3—12—71